இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 75-ஆவது ஆண்டு!

கொண்டாடுவது குறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவு!

சென்னை, நவ. 26-

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 75-ஆம் ஆண்டு நிகழ்ச்சிகள் - அரசு அலுவலகங்கள், அரசு சார்ந்த மற்றும் தன்னாட்சி நிறுவனங்கள், பள்ளி மற்றும் கல்லூரிகளில் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் முகப்புரையை வாசிக்கவும், பள்ளி மற்றும் கல்லூரிகளில் பல்வேறு போட்டிகளை நடத்திடவும் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்.

இது குறித்து தமிழ்நாடு அரசு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு வருமாறு:

மக்களாட்சித் தத்துவத்தின் மாண்பினை உள்ளடக்கி இந்தியத் திருநாட்டினை வளமான பாதையில் முன்னெடுத்துச் செல்லும் ஓர் உன்னத உருவாக்கம், அண்ணல் அம்பேத்கர் அவர்கள் வடிவமைத்துத் தந்த நமது அரசியலமைப்புச் சட்டமாகும்.



இந்திய அரசியலமைப்பு சட்டத்தின் 75-வது ஆண்டினை சிறப்பாகக் கொண்டாடும் வகையில் வரும் 26.11.2024 நாளன்று காலை 11 மணிக்கு தலைமைச் செயலகத்திலுள்ள அனைத்துத் துறைகளிலும், மாண்பமை உயர்நீதிமன்றம் மற்றும் மாவட்ட ஆட்சியர் அலுவலகங்கள் உள்ளிட்ட அனைத்துத் துறை தலைமை அலுவலகங்கள், அனைத்து சார்நிலை அரசு அலுவலகங்கள், மாநில அரசின் அனைத்து அலுவலகங்கள், தன்னாட்சி அதிகார அமைப்புகள், நிறுவனங்கள், தன்னாட்சி அரசு நிறுவனங்கள், அனைத்துப் பள்ளிகள் மற்றும் கல்லூரிகளிலும் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் முகப்புரையை வாசிக்க முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டு, அதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

மேலும், பள்ளி மற்றும் கல்லூரிகளிலும் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் அடிப்படைக் கோட்பாடுகள் மற்றும் அரசியலமைப்பு நெறிமுறைகள் பற்றிய பேச்சுப் போட்டிகள்/கருத்தரங்குகள்/வினாடி வினா நிகழ்ச்சிகளை நடத்தவும் அரசு ஏற்பாடு செய்துள்ளது.

இவ்வாறு தமிழ்நாடு அரசின் செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

மலை ஏறும் வீராங்கனை முத்தமிழ்ச்செல்விக்கு - விரைவில்

சிலி நாட்டு விசா கிடைத்திட நடவடிக்கை எடுத்திடுவீர்!

ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சருக்கு - மக்களவை கழகக் குழுத் தலைவர் டி.ஆர்.பாலு கடிதம்!

சென்னை, நவ.26-

"மலையேறும் வீராங்கனை முத்தமிழ்ச்செல்விக்கு விரைவில் சிலி நாட்டு விசா கிடைத்திட நடவடிக்கை எடுத்திட வேண்டும்" என்று நாடாளுமன்ற மக்களவை கழகக் குழுத் தலைவர் டி.ஆர்.பாலு அவர்கள் ஒன்றிய வெளியுறவுத்துறை அமைச்சருக்குக் கடிதம் எழுதியுள்ளார்.

இதுபற்றிய செய்தி வருமாறு:-

சென்னையைச் சேர்ந்தவர் மலையேறும் வீராங்கனை முத்தமிழ்ச்செல்வி நாராயணன். இவர், உலகின் மிக உயரமான மலைச் சிகரமான இமயமலையில் உள்ள எவரெஸ்ட் சிகரத்தில் வெற்றிகரமாக ஏறி உலகிலேயே முதல் பெண் வீராங்கனை என்ற சாதனை படைத்துள்ளார். இவரது இந்த வீரசாகச சாதனையைப் பாராட்டி தமிழ்நாடு அரசு, அவருக்கு 'கல்பனா சாவ்லா' விருதை கடந்த 2023ஆம் ஆண்டில் வழங்கி பெருமைப்படுத்தி உள்ளது.

எவரெஸ்ட் மட்டுமல்லாமல் ஐரோப்பா, ஆப்ரிக்கா, அர்ஜென்டினா, ஆஸ்திரேலியா போன்ற கண்டங்களிலும், நாடுகளிலும் உள்ள மிக உயரமான சிகரங்களிலும் ஏறி இவர் சாதனை படைத்துள்ளார். இதனைத் தொடர்ந்து அன்டார்ட்டிகாவிலும் இத்தகைய மலையேறும் சாதனையைப் படைக்கத் திட்டமிட்டுள்ள முத்தமிழ்ச்செல்வி நாராயணன், இந்த புது முயற்சியை டிசம்பர் 2024 இரண்டாம் வாரத்தில் மேற்கொள்ள திட்டமிட்டுள்ளார்.

இதன் பொருட்டு முத்தமிழ்ச்செல்வி, சிலி நாட்டின் விசாவுக்காக விண்ணப்பித்துள்ளார். அக்டோபர் 10, 2024 அன்று மும்பையில் உள்ள சிலி நாட்டின் துணைத் தூதரகத்தில் இது தொடர்பாக உரிய விண்ணப்பத்தைச் சமர்ப்பித்ததுடன் அதற்கு அடுத்த நாளே, 11.10.2024 அன்று விசாவுக்கான நேர்முகக் காணலிலும் பங்கேற்றார். வழக்கமாக 30 நாட்களில் கிடைக்கும் சிலி நாட்டின் விசா, வீராங்கனை முத்தமிழ்ச் செல்விக்கு இதுவரை கிடைக்காத நிலையில், முத்தமிழ்ச் செல்வியின் அன்டார்ட்டிகா மலையேறும் திட்டம் கேள்விக்குறி ஆகிவிட்டது.

அவர் இப்பயணத்தைத் திட்டமிட்டபடி மேற்கொள்ளாவிடில் பயண ஏற்பாட்டுத் தொகையான 52 லட்சம் ரூபாயை முழுவதுமாக இழக்க நேரிடும் என பயண ஏற்பாட்டு நிறுவனம் முத்தமிழ்ச் செல்விக்கு தெரிவித்துள்ளது.

இந்த இக்கட்டான சூழலில் சிலி நாட்டின் விசாவை உடனடியாகப் பெறுதனக்கு உதவிடுமாறு திருப்பெரும்புதூர் நாடாளுமன்ற உறுப்பினர் டி.ஆர்.பாலு அவர்களுக்கு, முத்தமிழ்ச்செல்வி வேண்டுகோள் வைத்துள்ளார். அவரது கோரிக்கையை ஏற்று நாடாளுமன்ற மக்களவை தி.மு.க. குழுத் தலைவர் டி.ஆர்.பாலு எம்.பி. அவர்கள், இந்த பிரச்சினையில் மலையேறும் வீராங்கனை முத்தமிழ்ச் செல்வி விரைவில் சிலி நாட்டு விசா பெற்றிட உரிய நடவடிக்கை எடுக்கக் கோரி பரிந்துரை செய்து ஒன்றிய வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் சு.ஜெய்சங்கர் அவர்களுக்கு நேற்று முன்தினம் (24.11.2024) விரிவான கடிதம் எழுதி உள்ளார்.

முத்தமிழ்ச்செல்வி அன்டார்ட்டிகாவில் மலையேறும் சாதனை வெற்றிகரமாக அமையுமானால் இது அவரது ஆறாவது சிகரம் தொடும் சாகசம் என்றும், அதனால் தமிழ்நாட்டுக்கும், இந்தியாவுக்கும் பெருமை சேர்க்கும் என்றும் டி.ஆர். பாலு அவர்கள் தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

திருவாரூர் மாவட்டத்தில் ரூ.2.27 கோடி மதிப்பில்

10 புதிய துணை சுகாதார நிலையக் கட்டிடங்களின் திறப்பு விழா!

மருத்துவம் – மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தலைமையில் நடைபெற்றது!

திருவாரூர், நவ.26-

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் ஆணையின்படி திருவாரூர் மாவட்டத்தில் ரூ.2.27 கோடி மதிப்பீட்டில் 10 புதிய துணை சுகாதார நிலைய கட்டடங்களின் திறப்பு விழா மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன் தலைமையில் நடைபெற்றது. திருவாரூர் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.தி.சாருஸ்ரீ, நாகப்பட்டினம் நாடாளுமன்ற உறுப்பினர் வை.செல்வராஜ், திருவாரூர் சட்டமன்ற உறுப்பினர் பூண்டி.கே.கலைவாணன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இந்நிகழ்வில் அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்ததாவது :-

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் ஆணையின்படி திருவாரூர் மாவட்டத்தில், திருவாரூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பகுதியில் தலா ரூ.20 இலட்சம் மதிப்பீட்டில் எண்கண் துணை சுகாதார நிலையம், அகரதிருநல்லூர் துணை சுகாதார நிலையம், குளிக்கரை துணை சுகாதார நிலையம், கீரங்குடி துணை சுகாதார நிலையம், தப்ளாம்புலியூர் துணை சுகாதார நிலையம் மற்றும் ரூ.25 இலட்சம் மதிப்பீட்டில் வடபாதிமங்கலம் துணை சுகாதார நிலையம், நன்னிலம் சட்டமன்றதொகுதிக்குட்பட்ட பகுதியில் தலா ரூ.24 இலட்சம் மதிப்பீட்டில் வலங்கைமான் மேற்கு துணை சுகாதார நிலையம், விலத்தூர் துணை சுகாதார நிலையம், வடகரை ஆலத்தூர் துணை சுகாதார நிலையம் மற்றும் ரூ.30 இலட்சம் மதிப்பீட்டில் மூடிகொண்டான் துணை சுகாதார நிலையம் என மொத்தம் ரூ.2.27 கோடி மதிப்பீட்டில் 10 மருத்துவ கட்டடங்கள் இன்றைய தினம் (24.11.2024) திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இச்சஞ்சிவீனி திட்டத்தின் கீழ் ரூ.20 இலட்சம் மதிப்பீட்டில் திறக்கப்பட்ட எண்கண் துணை சுகாதார நிலையத்தில் செவிலியர்கள் மட்டுமே பணியில் இருப்பார்கள். துணை சுகாதார நிலை யத்தின் பணி என்பது எண்கண் பகுதியிலுள்ள கர்ப்பிணி தாய்மார்களை பரிசோதிப்பது, கண்காணிப்பது, தேவையான மருத்துவ வசதிகளுக்கு துணை நிற்பது போன்ற செயல்பாடு துணை சுகாதார நிலையத்தின் நோக்கமாகும். அது மட்டுமின்றி, எண்கண் சுகாதார நிலையம் மக்களைத்தேடி மருத்துவம் திட்டத்தில் சிறப்பாக செயல்பட்டுவருகின்றது. இப்பகுதிகளில் உள்ள மக்களுக்கு மருத்துவர் உதவி தேவைப்பட்டலோ, மருத்துவ வசதி தேவைப்படும்போது இசஞ்சிவீனி திட்டம் மூலம் நோயாளியையும், மருத்துவரையும் தொலைபேசியில் காணொலி வாயிலாக பேச செய்து, நோயாளிக்கு தேவையான மருத்துவம் பெறுவதற்கான வசதியும் அடங்கியுள்ளது.

மருத்துவத் துறையில் மறுமலர்ச்சி!

முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி கடந்த 3½ வருடங்களில் மட்டுமே 1340 புதிய கட்டடங்கள் தமிழ்நாட்டின் முழுவதிலும் திறந்து வைக்கப்பட்டு ஒரு பெரிய மறுமலர்ச்சி மருத்துவத்துறையின் சார்பில் உருவாக்கப்பட்டுள்ளது.

கடந்த 3½ ஆண்டுகளில் திருவாரூர் மாவட்டத்திற்கு மருத்துவத்துறையின் சார்பில் ஏராளமான பணிகள் மேற்கொள்ளப்பட்டு, அவைகள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. திருவாரூர் மாவட்டதில் மட்டுமே ரூ.68 கோடியே 7 லட்சம் மதிப்பீட்டில் பல்வேறு மருத்துவத் துறை கட்டடங்கள் ஏற்கனவே திறந்து வைக்கப்பட்டுள்ளது. ஏற்கனவே, இரண்டு நகர்புற நலவாழ்வு மையங்கள் முதலமைச்சர் அவர்களால் காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைக்கப்பட்டு தற்பொழுது அவை பயன்பாட்டில் இருந்து கொண்டிருக்கிறது. 23 துணை சுகாதார நிலைய கட்டடங்கள் ரூ.5 கோடியே 25 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டதும் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

தொடர்ந்து, முதலமைச்சர் அவர்கள் திருவாரூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் புதியதாக கட்டப்பட்ட சீமாங்க் கட்டிடத்தினை திறந்து வைத்தார்கள். சட்டமன்ற அவர்களின் கோரிக்கையின்படி, சீமாங்க் கட்டிடம், சித்த மருத்துவ புறநோயாளிகள் பிரிவு, உணர்ச்சி ஒருங்கிணைப்பு மற்றும் சிகிச்சை பூங்கா, எம்.ஆர்.ஐ மற்றும் கேத்லேப் போன்ற அதிநவீன மருத்துவ உபகரணங்கள் தொடங்கி வைக்கப்பட்டு பொதுமக்கள் பயன்பெற்று வருகின்றனர். இக்கல்லூரியில் மகப்பேறு மருத்துவர்கள் 10 பேர்கள் தற்பொழுது பணியில் உள்ளனர். மருத்துவ காலிப்பணியிடங்களை நிரப்புவதற்கான நடவடிக்கையும் தொடர்ந்து தமிழ்நாடு அரசால் மேற்கொள்ளப்பட்டுவருகிறது.

கடந்த 6 மாதத்திற்கு முன்னாள் 1021 மருத்துவர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். எந்த மாவட்டத்தில் அதிகமான மருத்துவப் பணியிடங்கள் காலியாகவுள்ளோதா அங்கேயே கலந்தாய்வின் மூலம் மருத்துவர்கள் நியமிக்கப்பட்டனர். திருவாரூர் மாவட்டத்தில் 6 மாதத்திற்கு முன்னால் 71 மருத்துவப் பணியிடங்கள் நிரப்பப்பட்டுள்ளது. இவ்வாண்டு 1353 மருத்துவ காலிபணியிடங்கள் உள்ளது. இக்காலிப்பணியிடங்களை நிரப்ப அரசு முடிவெடுத்தபோது முதலமைச்சர் அவர்கள் ஒவ்வொரு வருடமும் 1200 அளவுக்கு மருத்துவ பணியிடங்கள் காலிப்பணியிடங்களாக வருகிறது எனவே அடுத்த அடுத்த வருடத்திற்கும் சேர்ந்து அதாவது 2026ஆம் ஆண்டிற்கும் சேர்ந்து மருத்துவத் தேர்வாணையம் மூலம் மருத்துவர்களைத் தேர்வு செய்ய உத்தரவிட்டுள்ளார்கள். அதனடிப்படையில், மருத்துவ நியமனத்திற்கு 24000 பேர் விண்ணப்பித்துள்ளனர். ஜனவரி திங்களில் மருத்துவ காலிப்பணியிடத்திற்கான தேர்வு நடைபெறும். டாடா கன்சல்டன்சி மூலம் 24000 பேருக்கும் ஒரே நேரத்தில் தேர்வு நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இத்தேர்வினை ஜனவரி திங்களின் முதல் வாரத்திலேயே வைக்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

காலிப் பணியிடம்!

இத்தேர்வு மூலம் மருத்துவர்கள் தேர்வு செய்யப்பட்டு 10 நாட்களில் பணிநியமன ஆணை வழங்கப்படவுள்ளது. இவ்வாறு செய்வதால் 2026ம் ஆண்டிற்கு சேர்ந்து மருத்துவர்கள் தேர்வின் மூலம் நியமிக்கப்படுவதால் தமிழ்நாட்டில் ஒரு மருத்துவ பணியிடம் கூட காலியாக இருக்காது. தமிழ்நாட்டில் 220 இடங்களில் காலியாக வுள்ள மகப்பேறு மருத்துவர்களையும் நேர்காணல் முறையில் எடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு டிசம்பருக்குள் அக்காலிப்பணியிடமும் நிரப்பபடும். விரைவில் திருவாரூர் மற்றும் நாகப்பட்டினத்தில் மகப்பேறு மருத்துவர்கள் பணியில் அமர்த்தப்படுவார்கள். 2250 கிராம சுகாதார செவிலியர்களின் காலிபணியிடத்தினையும், நிரப்புவதற்கான பணியும் நடைபெற்றுவருகிறது.

முதலமைச்சர் அவர்களின் ஆட்சியானது எல்லார்க்குமான ஆட்சி. திராவிட மாடல் ஆட்சி. மக்கள் அனைவருக்கும் அனைத்து விதமான வசதிகளும் கிடைக்க வேண்டுமென்பதே முதலமைச்சர் அவர்களின் நோக்கம். மேலும் திருவாரூர் மாவட்டத்தில் ரூ.56.13 கோடி மதிப்பீட்டில் 30 மருத்துவ கட்டடங்களின் பணிகள் நடைபெற்றுவருகிறது.

இவ்வாறு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்தார்.

தொடர்ந்து, பொது சுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு மருந்துத்துறை சார்பில் பள்ளி சிறார் கண்ணொளி காப்போம் திட்டத்தின் கீழ் 5 பள்ளி மாணக்கர்களுக்கு மூக்கு கண்ணாடியும், 5 பயனாளிகளுக்கு ஊட்டச்சத்து பெட்டகத்தினையும் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் வழங்கினார்.

நாகூர் தர்காவின்

சந்தனக் கூடு திருவிழா முன்னேற்பாட்டுப் பணிகள்!

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆய்வு மேற்கொண்டார்!

நாகை, நவ.26-

நாகப்பட்டினம் மாவட்டம், நாகூர் தர்காவின் சந்தனக்கூடு திருவிழா வருகிற 02.12.2024 அன்று கொடியேற்றத்துடன் தொடங்கி 15.12.2024 வரை நடைபெறுவதை யொட்டி, துணை முதலமைச்சர் அவர்கள் நேற்று முன்தினம் (24.11.2024) விழா முன்னேற்பாடு பணிகள் குறித்து நேரில் ஆய்வு மேற்கொண்டார்.

இந்த ஆய்வுக்குப் பின்னர், துணை முதலமைச்சர் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது :-

உலகப்புகழ் பெற்ற நாகூர் தர்காவின் சந்தனக் கூடு திருவிழா வருகின்ற டிசம்பர் 2 ஆம் தேதி தொடங்கி 15 ஆம் தேதி வரை நடைபெற இருக்கின்றது.

நம்முடைய தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, நாகூர் சந்தனக்கூடு திருவிழாவுக்கான ஏற்பாடுகளை அமைச்சர்களுடன் அதிகாரிகளுடன், மக்கள் பிரதிநிதிகளுடன் இன்றைய தினம் ஆய்வு செய்திருக்கின்றோம். நாகூர் சந்தனக்கூடு விழா சிறக்க அனைத்து ஏற்பாடுகளையும் நம்முடைய திராவிட மாடல் அரசு சிறப்பாக செய்துள்ளது.

முக்கியமாக, சந்தனக் கூட்டிற்கு 45 கிலோ சந்தனக் கட்டைகளை தமிழ்நாடு அரசே கட்டணமின்றி தர்கா நிர்வாகத்துக்கு வழங்கியுள்ளது. அதற்கு தர்கா நிர்வாகத்தினர் நன்றி தெரிவித்துள்ளார்கள். சந்தனக் கூடு திருவிழாவுக்கு, தமிழ்நாடு மட்டுமன்றி, வெளியூர் வெளிநாடுகளில் இருந்தும் ஏராளமான யாத்ரீகர்கள் வர உள்ளனர். அவர்களுக்கான தங்குமிடம், உணவு, குடிநீர், கழிப்பிட வசதி உள்ளிட்டவற்றை தயார் செய்ய அதிகாரிகளுக்கு உத்தரவிட்டப்பட்டுள்ளது. குறிப்பாக 500 மீட்டருக்கு ஒரு இடத்தில் குடிநீர்த் தொட்டி (தண்ணீர் டாங்க்) அமைக்க வலியுறுத்தப்பட்டுள்ளது.

போக்குவரத்து மாற்றங்கள் குறித்தும், பார்க்கிங் வசதிகளை ஏற்படுத்தவும் ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளது. நாகூர் சந்தனக்கூடு திருவிழாவின் போது தற்காலிக மருத்துவ முகாம் அமைக்க உத்தரவிட்டிருக்கின்றோம்.

மேலும், சிசிடிவி கேமரா வசதி, கண்காணிப்பு கோபுரங்களை ஏற்படுத்தவும் ஆலோசனைகளை வழங்கியிருக்கின்றோம். அன்னதான முகாமில் வழங்கப்படும் உணவின் தரத்தை உறுதி செய்ய உணவு பாதுகாப்புத்துறை மூலம் நடவடிக்கை எடுத்துள்ளோம். கடற்கரையில் போதிய பாதுகாப்பை வழங்கிட நடவடிக்கை எடுத்துள்ளோம்.

சிறப்பு பேருந்துகளை இயக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ஆட்டோக்கள் அதிக கட்டணம் வசூலிப்பதை தடுக்க நடவடிக்கை கண்டிப்பாக எடுக்கப்படும். வெளி மாநிலம், வெளிநாட்டில் இருந்து வருகின்ற பயணிகள் எளிதில் தர்காவுக்கு வந்து போகும் வகையில், பல்வேறு மொழிகளில் தகவல் பலகைகள் வைக்கப்பட உள்ளன.

கழிவுநீர் குப்பைகளை உடனுக்குடன் அப்புறப்படுத்த அனைத்து ஏற்பாடுகளும் தயார் நிலையில் உள்ளன. மேலும் குறிப்பாக, அனைத்து துறைகளும் ஒன்றாக இணைந்து, நாகூர் சந்தனக்கூடு திருவிழாவை பாதுகாப்பாகவும், யாத்ரீகர்கள் மகிழும் வண்ணமும் சிறப்பாக நடத்துவது என்று இந்த ஆய்வின் போது அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இவ்வாறு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தெரிவித்தார்.

இந்த ஆய்வின்போது, உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி. செழியன், சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் எஸ்.எம்.நாசர், பள்ளி கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பிற்படுத்தப் பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன், தமிழ்நாடு அரசின் டெல்லி சிறப்பு பிரதிநிதி ஏ.கே.எஸ்.விஜயன், சட்டமன்ற உறுப்பினர் ஜெ.முகம்மது ஷா நவாஸ், சிறப்புத் திட்ட செயலாக்கத்துறையின் செயலாளர் மருத்துவர் தாரேஸ் அகமது, மாவட்ட ஆட்சித் தலைவர் ப. ஆகாஷ், சிறப்புத் திட்ட செயலாக்கத்துறையின் துணைச் செயலாளர் மு.பிரதாப், தமிழ்நாடு மீன் வளர்ச்சி கழக தலைவர் என்.கௌதமன், தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகத் தலைவர் உ.மதிவாணன், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஏ.கே. அருண் கபிலன், நாகூர் தர்கா தலைமை நிருவாக அறங்காவலர் சையது முகமது காஜி ஹுஸைன் சாஹிப், நாகூர் தர்கா ஆலோசனைக் குழு தலைவர் சையது முகமது கலீபா சாஹிப், மாநில சிறு பான்மையினர் நல ஆணையத்தின் உறுப்பினர் நாகூர் ஏ.எச். நஜிமுதீன் ஆகியோர் உடனிருந்தனர்.

அமைச்சர்கள் சிறப்புரை! கோவை தெற்கு மாவட்டத்தில்

மேற்கு மண்டல தி.மு.க. ஆதிதிராவிடர் நலக்குழு நிர்வாகிகள் கூட்டம்!

மாவட்டக் கழக செயலாளர் தளபதி முருகேசன் அறிவிப்பு!

கோவை, நவ. 26-

கோவை தெற்கு மாவட்டச் செயலாளர் தளபதி முருகேசன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

தமிழ்நாடு துணை முதலமைச்சர், கழக இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுடைய பிறந்தநாளை முன்னிட்டு வால்பாறை நகர மக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்குதல் மற்றும் மேற்கு மண்டல திமுக ஆதிதிராவிடர் நலக்குழு நிர்வாகிகள் கூட்டமும் வால்பாறையில் இன்று (26/11/2024) காலை 10 மணி அளவில் நடைபெற இருக்கிறது.

விழாவில் மின்சாரம் மற்றும் மதுவிலக்கு ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் வி. செந்தில் பாலாஜி, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், மனிதவள மேம்பாட்டு துறை அமைச்சர் கயல்விழி, ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் மதிவேந்தன், துணைப் பொதுச் செயலாளர் அந்தியூர் செல்வராஜ் எம்.பி., மாநில ஆதிதிராவிடர் நலக்குழு செயலாளர் சட்டமன்ற உறுப்பினருமான ஆ. கிருஷ்ணசாமி, மாநில ஆதிதிராவிடர் நலக்குழு இணைச் செயலாளர் திப்பம்பட்டி ஆறுச்சாமி ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றுகிறார்கள்.

எனவே கோவை தெற்கு மாவட்டத்திற்கு உட்பட்ட மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் பகுதி வட்ட கழக செயலாளர்கள், கழக நிர்வாகிகள் கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டுகிறேன்.

இவ்வாறு கோவை தெற்கு மாவட்டக் கழக செயலாளர் தளபதி முருகேசன் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

ஒருங்கிணைந்த சேலம் மாவட்ட முன்னாள் செயலாளரும், முன்னாள் அமைச்சருமான வீரபாண்டி ஆ. ஆறுமுகம் நினைவுநாளையொட்டி சேலம் மாவட்டம் வீரபாண்டி ஒன்றியம் பூலாவரி கிளைக் கழக அலுவலகத்தில் இருந்து கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர் எஸ். ஆர். சிவலிங்கம் தலைமையில் அமைதி ஊர்வலமாகச் சென்று அன்னாரின் நினைவிடத்தில் மலர் மாலை வைத்து அஞ்சலி செலுத்தினர். இந்நிகழ்வில் அமைச்சர் இரா. ராஜேந்திரன், மாவட்ட துணை செயலாளர்கள் சுரேஷ்குமார், சின்னதுரை, கோமதி, மண்டல தகவல் தொழில் நுட்ப அணி பொறுப்பாளர் டாக்டர் தருண், மாவட்ட அவைத்தலைவர் முரா. கருணாநிதி, மாவட்ட நெசவாளர் அணி அமைப்பாளர் ஏ. ஏ. ஆறுமுகம், மேயர் ராமச்சந்திரன், மாவட்ட மாணவரணி அமைப்பாளர் முனைவர் அ. சீனிவாசன், மலர்விழி ராஜா, தமிழ்ச்செல்வன், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் வீரபாண்டி ஆ. பிரபு, சந்திரமோகன், முத்துலிங்கம், சோமசுந்தரம், சங்கர், கோபால், ப்ரண்ட்ஸ் ரமேஷ், ஒன்றிய செயலாளர்கள் வெண்ணிலா சேகர், மாணிக்கம், உமாசங்கர், டாக்டர் செழியன், மணி, சித்தார்த்தன், அழகுவேல், பாலமுருகன், சக்கரவர்த்தி, மாதேஸ்வரன், ராஜேந்திரன், மூர்த்தி, சிவராமன், மருதமுத்து, ரத்தினவேல், நகர செயலாளர்கள் பாலசுப்பிரமணியன், வேல்முருகன், மற்றும் குடும்பத்தினர், மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர், நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

கழக இளைஞரணி செயலாளரும், துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு ஈரோடு தெற்கு மாவட்டக் கழக இளைஞர் அணி துணை அமைப்பாளர் அந்தியூர் இரா. நித்தின் ஏற்பாட்டின் கஸ்பாபேட்டையில் உள்ள கர்ணாலயா குழந்தைகள் காப்பகத்தில் உள்ள குழந்தைகளுக்கு விளையாட்டு உபகரணங்கள், அறுசுவை உணவை மொடக்குறிச்சி மேற்கு ஒன்றிய செயலாளர் சு.குணசேகரன் வழங்கினார். நிகழ்வில் ஈரோடு தெற்கு மாவட்டக் கழக இளைஞரணி அமைப்பாளர் ஜெ.திருவாசகம், அவல்பூந்துறை பேரூர் செயலாளர் சாமியப்பன், சீனிவாசன், மாவட்ட விவசாய அணி துணை அமைப்பாளர் சி.மகேந்திரன், ராஜா (எ) ஆசைதம்பி, டி.பிரகாஷ், எஸ்.வி.என். சங்கர், சம்பத் உள்ளிட்ட கழக நிர்வாகிகள், இளைஞர் அணியினர் பலர் உள்ளனர்.